# 2019 மாசி மாத சங்க குடும்ப தின நற்செய்தி

***இறையரசாகிய இயேசுகிறிஸ்து ஆண்டவர் அதை வெளிப்படுத்தக்கூடிய தகைமையுடைய மகனுமாவார்***

01. ஆரம்பப் புகழ்ச்சி புபுது பாடல் இல. 11 “ஆவியின் வருகையும்….”

02. புகழ்ச்சிக்கான அறிமுகம்

2கொரிந்தியர் 5:16-17, 21

**“……எனவே ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது அவர் புதிதாக படைக்கப்பட்டவராய் இருக்கிறார். புழையன கழிந்து புதியன புகுந்தன அன்றோ!”**

**“நாம் கிறிஸ்து வழியாகத் தமக்கு ஏற்புடையவராகும் படி கடவுள் பாவம் அறியாத அவரைப் பாவ நிலையை ஏற்கச் செய்தார்.”**

இயேசுக்கிறிஸ்து ஆண்டவரை எமது வாழ்வின் ஒரே அண்டவராக ஏற்றுக்கொண்டு வாழ்வதற்குரிய மக்களாக நாம் பெற்றுள்ள போது பாக்கியமான நிலைக்காக நாம் உன்னதராம் கடவுளை போற்றுவது மிகத் தகும். கிறிஸ்து ஆண்டவருக்குள் வாழ்க்கையில் நாம் பெற்றுள்ள புதிதான நிலை அவரை ஏற்றுக் கொண்டு வாழ்வதின் பிரதிபலனாகும். எமக்குரித்தான பாவ நிலையிலிருந்து எம்மை தார்மீக மக்களாக வாழ்வதற்கு பாவமே அறியாத இயேசு ஆண்டவரை பாவமாக மாற்றிய கடவுளின் செயலால் அவர் நம்மேல் கொண்டுள்ள அளவற்ற அன்பு எப்பேப்பட்டது என்பது புலனாகின்றது. எமது பெலவீனம் பாவத்தன்மையை நோக்காமல் என்றுமுள்ள அன்போடு எம்மை அன்பு செய்யும் மகா உன்னதராம் கடவுள் முன்னிலையில் மனம் வருந்தி நமக்குக் காட்டும் அன்புக்காக நன்றித் துதி பகர்வோம்.
புபுது பாடல் 134 “பரம நிறைவின் ….”

03. மீளப் பார்த்தல்
   i. பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு திருவிழாவோடு நீங்கள் பெற்ற வல்லமையான பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு, கடந்த மாதம் பூராகவும் உங்களது வாழ்வினுள் அனுபவித்த விதம் பகிர்ந்து கொள்ளவும்.
   ii. இறையரசை முன்கொண்டு உங்களுக்குள் பற்றியெரிந்த பரிசுத்த ஆவியின் தீயினால் பற்றியெரிந்து இறையரசைப் பரப்புவதற்கு ஏதாவது படியெடுத்தீர்களா?

04. நாளுக்குரிய நற்செய்தி 1வது பகுதி – புனித மத்தேயு 3:2

**“இறையரசராகிய இயேசுக்கிறிஸ்து ஆண்டவர்”**

இறையரசு என்பது கடவுளின் ஆளுமை இறை விருப்பம் இவ்வுலகில் நிறைவேறுதலாகும். புனித மத்தேயு நற்செய்திக்கு இணங்க இறையரசு என்ற பதத்திற்குப் பதிலாக விண்ணரசு அல்லது கடவுளின் அரசு என்று பாவிக்கப்பட்டுள்ளது. விண்ணக அரசு அல்லது இறை அரசு என்ற தலைப்பு கிறிஸ்து ஆண்டவரின் படிப்பித்தலில் பிரதானமான இடத்தை வகுக்கின்றது. நற்செய்தி வாசகங்களில் அரசு என்று கூறுவது சுயமாக அல்ல அரசாள்வது அல்லது ஆளுமையை செயல் படுத்துதலாகும். அது சில நிலைகளில் சுயமான நிலையில்லாமல் அரசு பற்றி செயல்படுத்துவதேயாகும். இவைகளினூடாக உலகில் உள்ள எல்லாவிதமான செயல்களிலும் கடவுளின் ஆளுமை நடைமுறை படுத்துதலாகும். இயேசு ஆண்டவரின் வாழ்வில் பிறப்பு முதல் சிலுவை மரணம் வரை அதனிலும் முற்றுப் பெறாமல் உயிர்த்தெழுதல் வரைக்கம் இறை தந்தையின் இறை நிர்வாகம் தனது வாழ்க்கைக்குள் நடப்பதற்கு அவர் முழுமையான விடுதலையோடு இடமளித்தார்.
இயேசு ஆண்டவர் வெளிப்படுத்திய சகல வார்த்தைகளிலும் செயல்களிலும் இருந்த தலைப்பு இறைஅரசை இவ்வுலகில் தோற்றுவிப்பதாகும்.

புனித லூக்கா 6:20-26 (நன்மை–தீமை)
புனித லூக்கா 11:2-4 (செபத்தை பற்றிய அறிமுகம்)
புனித மாற்கு 10:17-25 (செல்வந்த வாலிபன்)
புனித மத்தேயு 13:44-50 (விண்ணரசுவயலில் புதைந்திருந்த புதையல்
விண்ணரசு விலையுயர்ந்த மாணிக்கக்கல் தேடிச் சென்றவணிகனுக்கு,
விண்ணரசு கடலில் வீசப்பட்ட வலை)

இவருடைய முழு வாழ்வும் இறையரசை வெளிப்படுத்தியதாகும். எனவே இயேசு ஆண்டவர் இயைரசேயாவார்.

## 2ம் பகுதி
## இறையரசை வெளிப்படுத்துவதற்கு தகுதியான மகனுமான இயேசு ஆண்டவர்

புனித மாற்கு 1:11

**“……. என் அன்பார்ந்தமகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன். என்றார்”**

“**உன் பொருட்டு** நான் பூரிப்படைகிறேன்” என்ற வார்தையின் ஆழத்தை நோக்கும் போது அதன் ஆழமான அர்த்தம் பற்றி திருமுழுக்கு ரெலியின் திருப்பலிப் பூசையின் போது அலெக்ஸ் நிலன்த குருவானவர் போதித்த போதனை எமது நினைவிற்கு வருகின்றதில் சந்தேகமில்லை. “உன்னையிட்டு நான் பூரிப்படைகிறேன்” இதற்கான கிறீக் வசனம் “எவுதோகேசர்” என்பதாகும். இந்த வார்தையின் மேலோட்டமான அர்த்தம் ஒருவரைப் பற்றிய அழகான உணர்வு ஏற்படல் மற்றும் அவரைப் பற்றி மகிழ்ச்சி கொள்ளுதல் போன்றதாகும். ஆனால் ஆழமாக நோக்கும் போது கடவுள் மகனைப் பற்றி ஏற்படுத்திக் கொண்ட மகிழ்ச்சியான அனுபவம் என்னவென்பதை தெரிந்து கொள்ள முடியும். தந்தையின் உள்ளத்தில் மகனைப் பற்றி ஏற்பட்ட உணர்வு அல்ல மாறாக மகனானவரின் தகைமை இறைவனுக்கு புலப்பட்ட விதம் இதனால் பிரதிபலிக்கின்றது.

**“நீர் தான் எனது அரசை நிலைநாட்டுவதற்கு தகுதியான மகன்! உம்மை விட்டால் அதைச் செய்யக் கூடியவர் வேறுயாருமில்லை”** யோர்தான் நதியில் பரிசுத்த ஆவியானவரினால் திருமுழுக்கு பெற்ற அவர் கடவுளின் தகுதி மிகு மகனாக தமது வாழ்வில் சகல கணங்களையும் நிறைவேற்றிய விதம் புதிய ஏற்பாட்டில் முழுவதும் எமக்கு காணக் கூடியதாக உள்ளது. அவரது வார்த்தை – செயல்கள் - பார்வை – நடத்தை – வாழ்வின் முறை எல்லாம் தகுதியான மகனாக வாழ்வதற்கான வரம் பெற்ற மகனின் வெளிப்பாடாகும்.

புனித லூக்கா 6:1-15 புனித லூக்கா 9:18-20 புனித லூக்கா 11:2-5
தகுதி பெற்ற மகன் எக்கணமும் தந்தையின் கைகளில் தொங்கிநின்றார். இறை விருப்பம் தனது வாழ்வில் நடைபெற இடம் அளித்தார்.

எம்பேரில் :- கலந்துரையாடலுக்காக (நால்வர் கொண்ட குழுவில்)

1. இறையரசு என்பது உலகில் செயல்படும் சகலத்திலும் இறை ஆளுமை இடம் பெறுதல் என்றால்:-
   i. உங்களினதும் எனது வாழ்வில் நடைபெறுகின்ற அனைத்திலும் அதை வழிநடத்த ஆளுகை செய்ய கடவுளுக்கு இடமளிப்பதற்கு எமக்கு முடியுமா?
      - பிரத்தியேகமாக எனது தனிப்பட்ட வாழ்வில்
      - குடும்பத்தில் சங்கமத்தில் பங்கில் எனது நாட்டினுள்
   ii. இந்த அனைத்து அமைப்புகளிலும் இறைஅரசுக்கு முரணான செயல்கள் நடைபெறும் போது எனது செயல்பாடு என்ன?
   iii. இறையரசு முழு மனித குலத்திற்குமேயாகும். எளியவர் ஒதுக்கப்பட்டோர் தாழ்த்தப்பட்டோராகிய அனைவருக்கும் இறையரசின் உரிமையை சமீபமாக்குவதற்கு நான் படியெடுத்துள்ளேனா?
   iv. புலவிதமான கொள்கை வாதங்களுக்கு அடிபட்டு இறையரசின் பெறுமதியைக் கண்டுகொள்ளாமல் இருந்த சந்தர்ப்பங்களை கலந்துரையாடுவோம்.
      உதாரணம்:- எளிமையான வாழ்க்கை முறை சங்கம வாழ்வு
2. எமது திருமுழுக்கின் அழைப்பினூடாக நாம் அனைவரும் அழைக்கப் பெற்றது இறை புத்திரத்தன்மைக்கேயாகும். புத்திரத்தன்மையின் அழைப்பினுள்ளும் கடவுளின் பிரதிபலனான புத்திரத்தன்மையை அடைவதற்கு தகுதியுடைய மகனாவதற்கு எமக்கு விசேடமான அழைப்பு உண்டு.

   i. நாம் எம்மை நோக்கும் போது உண்மையாகவே தகுதியான மகனாவதற்கு எனக்குத் தகுதி உண்டா?
   ii. எனது மணித்தியாலம் - நிரந்தர விழிப்புறுதல் - பரிசுத்த வேதாகம வாசிப்பு – திவ்வியப் பலிப்பூசை – திவ்விய நற்கருணைநாதர் முன்னிலையில் தோன்றிநிற்றல் - இறைவிருப்பத்தை தேடல் - எனது வாழ்வில் முக்கியத்துவங்களா?

05. இறுதிச் செபம்

இறை தந்தையின் தகுதியான மகனாக மகளாக வாழவேண்டுமேயானால் - பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு எந்நேரமும் எமக்குத் தேவை. நால்வர் கொண்ட குழுவில் அந்த ஸ்னாணத்திற்காக செபத்திற்கு உள்ளாகுவோம்.

புபுது பாடல் இல 03 “ஆ வந்திடுவீர் தூய ஆவியே….”